


# எண்கள்

## 2.1 நான்கு இலக்க எண்ணை ஓரிலக்க எண்ணால் வகுத்தல்

### 2.1.1 பல்வேறு வழிகளில், கொடுக்கப்பட்ட எண்ணை வேறு ஒரு எண்ணால் வகுத்தல்.

கொடுக்கப்பட்ட எண்ணை மற்றொரு எண்ணால் வகுக்க, பல்வேறு வழிகள் உள்ளன. அவைகள்.

(i) சமப் பங்கிடுதல்

(ii) சமக் குழுக்களாகப் பிரித்தல்.

(iii) மீண்டும் மீண்டும் கழித்தல்

(iv) நீள் வகுத்தல்

(v) குறுகிய வகுத்தல்

நீங்கள் முன் வகுப்பிலேயே வகுத்தலின் வகைகளைக் கற்றுள்ளீர்கள். தற்பொழுது சம பங்கிடுதல் மற்றும் குறுகிய வகுத்தல் முறையைக் காண்போம்.

#### (i) சமப் பங்கிடுதல்

பிரியா தனது பிறந்த நாளைப் பெற்றோர்களான ரகு மற்றும் உஷாவுடன் கொண்டாட விரும்பினார். அவளுடைய அப்பா அவளுக்கு ஒரு இனிப்பப்பம் வாங்கினார். அவள் அந்த இனிப்பப்பத்தினை 18 துண்டுகளாகச் செய்து, தன்னுடைய பெற்றோர்களுடன் பங்கிட விரும்பினாள். ஒவ்வொருவரும் 6 துண்டுகள் பெற்றனர். அந்த நேரத்தில் அவளுடைய நண்பர்கள் லீலா, கலா, மாலா தங்களுடைய பரிசுகளுடன் வந்திருந்தனர். ஆகவே, அவள் அந்த இனிப்பப்பத்தை நண்பர்களுடன் பங்கிட விரும்பினாள். ஒவ்வொருவருக்கும் 3 துண்டுகள் கிடைக்கப் பெற்றன. சில நிமிடங்களுக்குப் பிறகு அவளுடைய பெற்றோர்களின் நண்பர்கள் மேரி, ரஹீம், ரவி வந்தனர். அவள் அவர்களுடனும் அந்த

**குறிப்பு**

வகுத்தலில் சமபங்கிடானது மீதியைக் கூட கொடுக்கும்.